Ontario

# செய்தி வெளியீடு

நிதி அமைச்சகம்

## ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்

**_ஒன்ராறியோவின் 2026 வரவுசெலவுத் திட்டம்_ மிகவும் போட்டித்திறன், மீளுந்தன்மை ஆகியவற்றைக் கொண்ட தற்சார்புடைய பொருளாதாரத்தைக் கட்டமைப்பதன் மூலம், ஒன்ராறியோ தொழிலாளர்களையும் குடும்பங்களையும் பாதுகாக்கும் திட்டத்தை வழங்குகின்றது.**

**செய்திகள்** மார்ச் 26, 2026

ரொறன்ரோ — இன்று, நிதி அமைச்சர் Peter Bethlenfalvy, *ஒன்ராறியோவின் 2026 வரவுசெலவுத் திட்டத்தை* வெளியிட்டார்: *ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்* தீர்வைகள் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற நிலைக்கு மத்தியில், G7 நாடுகளில் மிகவும் போட்டித்திறன் வாய்ந்த, மீள்தன்மை ஆகியவற்றைக் கொண்ட தற்சார்புடைய பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலம் ஒன்ராறியோவைப் பாதுகாக்கும் தனது திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இதில், ஒன்ராறியோவின் வரி நடவடிக்கை திட்டத்தின் (Ontario’s Tax Action Plan) அடுத்த கட்டத்தில் உள்ள குறிப்பிடத்தக்க வரி சலுகைகளும் அடங்கும். வேலைவாய்ப்புகளையும் முதலீடுகளையும் ஈர்ப்பது, தொழிலாளர்கள் மற்றும் வணிகங்களுக்கான செலவுகளைக் குறைப்பது, குடும்பங்கள் மற்றும் தனிநபர்களின் வாழ்க்கைச் செலவைக் கட்டுக்குள் வைத்திருப்பது, மற்றும் மாகாணத்தின் நீண்டகாலச் செழிப்பை ஆதரிக்கும் முக்கிய பொதுச் சேவைகளில் இலக்கு வைக்கப்பட்ட முதலீடுகளைச் செய்வது ஆகிய அரசாங்கத்தின் திட்டத்தை இந்த *2026 வரவுசெலவுத் திட்டம்* மேலும் முன்னெடுத்துச் செல்கிறது.

"ஒன்ராறியோ ஒரு நடைமுறைக்கு உகந்த மற்றும் விவேகமான நிதித் திட்டத்துடன் பொருளாதாரச் சவால்களைச் சமாளித்து வருகிறது," என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "இந்தக் கடினமான காலங்களில் மாகாணம் மேலும் வலுப்பெற உதவுவதற்காக, எரிசக்தி, அத்தியாவசிய கனிமங்கள், முக்கிய உள்கட்டமைப்பு மற்றும் முக்கிய தொழில்நுட்பங்கள் போன்ற மூலோபாய முன்னுரிமைகளில் நாங்கள் முதலீடு செய்கிறோம். இவை நமது பொருளாதாரத்தை வலுப்படுத்தும், அதே நேரத்தில் தேவையற்ற நிர்வாகத் தடைகளைக் குறைத்து, வணிகங்கள் வளர்வதற்கான சூழல்களை உருவாக்கி, தொழிலாளர்களுக்கு ஆதரவளிப்பதுடன், ஒன்ராறியோவின் பொருளாதாரத்தையும் வலுப்படுத்தும்."

சவாலான உலகளாவிய பொருளாதாரச் சூழ்நிலைகள் இருந்தபோதிலும், ஒன்ராறியோவின் *2026 வரவுசெலவுத் திட்டம்* மாகாணத்தின் மீள்திறன் மற்றும் இதுவரையிலான விவேகமான நிதி மேலாண்மையின் பலன்களைப் பிரதிபலிக்கிறது. மற்ற மாகாணங்களும் மத்திய அரசும் கணிசமான நிதி வெட்டுக்கள், அரசுப் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் அல்லது வரிகளை அதிகரித்தல் ஆகியவற்றைச் செய்துள்ள வேளையில், ஒன்ராறியோவின் *2026 வரவுசெலவுத் திட்டம்*, உள்கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற முக்கிய முன்னுரிமைகளுக்கான நிதியைத் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதே நேரத்தில், ஒன்ராறியோ குடும்பங்களின் வாழ்க்கையை மேலும் கட்டுப்படியானதாக மாற்றுவதற்கும், போட்டித்திறனை அதிகரிப்பதற்கும், மாகாணத்தில் முதலீடு மற்றும் வேலைவாய்ப்பைத் தூண்டுவதற்கும் கணிசமான வரி சலுகைகளை வழங்கி வருகின்றது.

இந்த அரசின் அணுகுமுறை, அதன் நிதித் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சமநிலைப் பாதையைப் பின்பற்றுகிறது. *2026 வரவுசெலவுத் திட்டம்*, முக்கிய பொதுச் சேவைகளில் தொடர்ச்சியான முதலீடுகளைச் செய்வதன் மூலம் விவேகமான மற்றும் நிதிப் பொறுப்புள்ள அணுகுமுறையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதோடு, மாறிவரும் சூழல்களுக்கு ஏற்பச் செயல்படுவதற்கும் ஒன்ராறியோ மக்களுக்கு ஆதரவளிப்பதற்கும் தேவையான நிதி நெகிழ்வுத்தன்மையையும் பேணுகிறது.

சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- G7 நாடுகளில் ஒன்ராறியோவை மிகவும் போட்டித்திறன் வாய்ந்த அதிகார வரம்பாக மாற்றுவதற்கும் செலவுகளைக் குறைப்பதற்கும் மாகாணத்தின் வரி செயல் திட்டத்தை நிறைவேற்றுதல்:

- $1 மில்லியன் வரையிலான மதிப்புள்ள புதிய வீடுகளை வாங்கத் தகுதியுள்ள அனைவருக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட விற்பனை வரியின் (Harmonized Sales Tax - HST) 13 சதவீதத்தை முழுமையாக நீக்குவதன் மூலம் வீடு வாங்குபவர்களுக்கு மேலும் நிவாரணம் வழங்குதல். இதன் மூலம் வாங்கும் தகுதியுள்ள ஒருவருக்கு அதிகபட்சமாக $130,000 வரை நிவாரணம் வழங்கப்படும், மேலும் $1.5 மில்லியன் வரையிலான மதிப்புள்ள புதிய வீடுகளுக்கு இந்தத் தொகை பராமரிக்கப்படும். மாகாண வீட்டுவசதி முயற்சிகளுக்கு ஆதரவாக ஒன்ராறியோவுடன் செலவைப் பகிர்ந்து கொள்ள மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இது மத்திய அரசின் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு உட்பட்டது. இந்தச் சட்டம், ஒன்ராறியோவில் உள்ள புதிய வீடுகளிலிருந்து நீக்கப்படும் HST-க்கான மத்திய அரசின் ஐந்து சதவீதப் பகுதியை ஏறக்குறைய ஈடுசெய்யும். இந்தக் கூட்டாண்மை ஒன்ராறியோவின் வீட்டுவசதிக்காக மொத்தமாகக் கிட்டத்தட்ட $2.2 பில்லியன் கூட்டு வரி நிவாரணத்தை வழங்கும்.
- ஜூலை 1, 2026 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், சிறு வணிக நிறுவன வருமான வரி (corporate income tax - CIT) விகிதத்தை 3.2 சதவீதத்திலிருந்து 2.2 சதவீதமாகக் குறைக்க முன்மொழிவதன் மூலம், ஒன்ராறியோவின் சிறு வணிகங்கள் தொடர்ந்து போட்டித்திறனுடனும் மீள்தன்மையுடனும் இருப்பதை உறுதி செய்தல். இந்த விகிதத்தை 30 சதவீதத்திற்கும் மேலாகக் குறைப்பதன் மூலம், அடுத்த மூன்று ஆண்டுகளில் 375,000-க்கும் மேற்பட்ட ஒன்ராறியோச் சிறு வணிகங்கள் கூடுதலாக $1.1 பில்லியன் நிறுவன வருமான வரி நிவாரணத்தால் பயனடையும்.
- மத்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட மாற்றங்களுக்கு இணையாகத், தேய்மானம் அடையக்கூடிய சொத்துக்களின் செலவிற்கான வருமான வரி விலக்கை வணிகங்கள் விரைவுபடுத்த அனுமதிப்பதன் மூலம், மூலதன முதலீடுகளின் செலவைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த மாற்றங்கள் பரந்த அளவிலான சொத்துகளில் முதலீடு செய்வதற்கான செலவைக் குறைக்கும் மற்றும் மத்திய அரசின் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நடைமுறைக்கு வரும்.

• ஒன்ராறியோவின் நீண்டகாலப் பொருளாதார மற்றும் மூலோபாய முன்னுரிமைகளை மேம்படுத்துவதற்காக, ஓய்வூதிய நிதிகள் மற்றும் பிற தனியார் மூலதனங்களிடமிருந்து முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு, மாகாணம் 4 பில்லியன் தொகை வரை முதலீடு செய்வதற்காக ஒன்ராறியோவைப் பாதுகாக்கும் முதலீட்டு நிதியக் கணக்கு' (Protect Ontario Account Investment Fund) நிறுவப்படுகின்றது

- மேலும் பல பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் அடிப்படை மருத்துவ சேவைகளைப் பெற வழிவகுப்பதோடு, மாகாணம் முழுவதும் இத்துறையின் திறனை மேலும் வலுப்படுத்துவதற்காக, ஒன்ராறியோ ஆட்டிஸம் திட்டத்திற்கான (Ontario Autism Program) நிதியுதவியை ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 1 பில்லியன் தொகையால் அதிகரித்தல்.

- ஒன்ராறியோவில் உள்ள அனைவரையும் ஒரு குடும்ப மருத்துவர் அல்லது முதன்மைப் பராமரிப்பு வழங்குநருடன் இணைக்கும் மாகாணத்தின் திட்டத்தை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில், முதன்மைப் பராமரிப்புச் செயல் திட்டத்தில் (Primary Care Action Plan) ஒன்ராறியோவின் நான்கு ஆண்டு கால முதலீட்டை 2025 முதல் 2029 வரைக்கும் $3.4 பில்லியனாக விரிவுபடுத்துதல். முதன்மைப் பராமரிப்புச் செயல் திட்டத்தின் மூலமான முன்னெடுப்புகள், முதன்மைப் பராமரிப்புடன் இணைய விரும்பும் ஒன்ராறியோவின் எஞ்சிய மக்களுக்கான இடைவெளியைக் குறைத்து, ஒன்ராறியோவில் உள்ள ஒவ்வொருவரையும் முதன்மைப் பராமரிப்புடன் இணைக்கும் இலக்கை அடையும்.

- 2026-27-க்கான $37 பில்லியன் தொகையை உள்ளடக்கியுள்ள. 10 ஆண்டுகளுக்கும் மேலாகத் திட்டமிடப்பட்ட முதலீடுகளின் மொத்த மதிப்பு $210 பில்லியனுக்கும் அதிகமாகும் வகையில், கனடிய வரலாற்றிலேயே மிகவும் லட்சியமிக்க மாகாண மூலதனத் திட்டத்தில் முதலீடு செய்தல். தொழிலாளர்களை வேலையில் வைத்திருக்கவும், ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், வரும் தலைமுறைகளுக்குச் சமூகங்கள் செழிப்புடன் வாழ்வதை உறுதி செய்யவும் நெடுஞ்சாலைகள், மருத்துவமனைகள், போக்குவரத்து மற்றும் சமூக உள்கட்டமைப்புகளைக் கட்டமைப்பது இதில் அடங்கும்.

- மாகாணம் முழுவதும் உள்ள விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளைப் பழுதுபார்த்தல், மேம்படுத்துதல் அல்லது புதியவற்றைக் கட்டுவதற்கு ஆதரவளிப்பதன் மூலம், வளர்ந்து வரும் சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் வகையில், சமூக விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு உள்கட்டமைப்பு நிதியத்தின் (Community Sport and Recreation Infrastructure Fund) மூலம் ஆறு ஆண்டுகளில் மேலதிகமாக $300 மில்லியன் தொகையை வழங்குதல். இந்தத் திட்டத்தின் மூலம் ஒன்ராறியோவின் முதலீடுகள் இப்போது மொத்தமாக $500 மில்லியனாக உள்ளது.

- தொடக்கப் பள்ளி வகுப்பாசிரியர்கள், தமது சொந்தச் செலவில் பொருட்கள் வாங்குவதைக் குறைப்பதற்காக, ஆண்டுக்கு $750 வழங்கும் வகுப்பறைப் பொருட்களுக்கான அட்டையைப் (Classroom Supplies Card) பெறுவதற்கு, வகுப்பறைப் பொருட்களுக்கான நிதியத்தை (Classroom Supplies Fund) உருவாக்குவதற்காக, ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் $66 மில்லியன் தொகையை முதலீடு செய்து, மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்துதல் மற்றும் அவர்களை எதிர்காலத்திற்குத் தயார்படுத்துதல்.

• பயணிகளுக்கான செலவுகளைத் தொடர்ந்தும் குறைவாக வைத்திருப்பதற்காக, ஒன்ராறியோ ஒற்றைக் கட்டணத் திட்டத்தை (Ontario One Fare Program) மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிப்பதன் மூலம், ரொறன்ரோ மாநகரம் மற்றும் ஹாமில்டன் பகுதியில் (GTHA) உள்ள தினசரி போக்குவரத்துப் பயனாளர்களுக்கு ஆண்டுக்கு $1,600 வரைக்கும் சேமித்துக் கொடுத்தல்.

## துரிதத் தகவல்கள்

- 2025-26 இல் ஒன்ராறியோவின் பற்றாக்குறை $12.3 பில்லியனாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது — இது *2025 வரவுசெலவுத் திட்டத்தில்* வெளியிடப்பட்ட கணிப்புடன் ஒப்பிடும்போது $2.3 பில்லியன் தொகை முன்னேற்றமாகும்.
- ஒன்ராறியோவின் விவேகமான திட்டம் வரிகளை உயர்த்தவோ அல்லது சேவைகளைக் குறைக்கவோ இல்லை, மேலும் சமநிலையைத் தக்கவைத்துக் கொள்ளும் மிகச் சில மாகாணங்களில் ஒன்ராறியோவும் ஒன்றாகும்.
- நடுத்தரக் காலத்தில், 2026-27 இல் $13.8 பில்லியன் மற்றும் 2027-28 இல் $6.1 பில்லியன் பற்றாக்குறைகளையும் பின்னர் 2028-29 இல் $0.6 பில்லியன் உபரியையும் அரசாங்கம் கணிப்பிட்டுள்ளது.
- ஒன்ராறியோவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2025 இல் மதிப்பிடப்பட்ட 1.2 சதவீதத்தால் உயர்ந்தது. மேலும் இது 2026 இல் 1.0 சதவீதத்தாலும், 2027 இல் 1.7 சதவீதத்தாலும், 2028 இல் 1.8 சதவீதத்தாலும் மற்றும் 2029 இல் 2.0 சதவீதத்தாலும் உயரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.
- ஒன்ராறியோவின் 2025–26-க்கான நிகரக் கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலுள்ள விகிதம் 36.8 சதவீதமாக இருக்கும் எனத் தற்போது கணிக்கப்பட்டுள்ளது. இது *2025 வரவுசெலவுத் திட்டத்தில்* கணிக்கப்பட்ட 37.9 சதவீதத்திலிருந்து 1.1 சதவீதப் புள்ளிகள் குறைவாகும். இதற்கு முக்கிய காரணம், கணிக்கப்பட்டதை விடப் பற்றாக்குறை குறைவாக இருப்பதே ஆகும். நடுத்தரக் கால கண்ணோட்டத்தில், நிகரக் கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலுள்ள விகிதம் 40.0 சதவீத இலக்கிற்குக் கீழே இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இது, கடன் சுமையைக் குறைப்பதில் ஒன்ராறியோ தொடர்ந்து நேர்மறையாக முன்னேற்றம் கண்டு வருவதைக் காட்டுகிறது.

## மேலதிக வளங்கள்

2026 வரவுசெலவுத் திட்டத்தை வாசிக்கவும்:
ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்

2026 வரவுசெலவுத் திட்டத்தின் சிறப்பம்சங்களை வாசிக்கவும்:
ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்

பின்புலத் தகவல்கள் (Backgrounder)-ஐ வாசிக்கவும்: பொருளாதார மற்றும் நிதியியல் கண்ணோட்டம்

---

**ஊடகத் தொடர்புகள்**

**news.ontario.ca/mof/en**
*Disponible en français*

Sarah Chapin
அமைச்சர் Bethlenfalvy இன் அலுவலகம்
Sarah.Chapin@ontario.ca

Scott Blodgett
தகவற்தொடர்புப் பிரிவு
Scott.Blodgett@ontario.ca